COLLABORATIVE CURRICULUM AND ASSESSMENT FRAMEWORK FOR LANGUAGES
AUSTRALIA

Student/Registration Number | | | | | | | | | Centre Number | | | | |

**2002 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

### Section 1: Listening and Responding (30 marks)

**Tuesday 29 October: 2 p.m. Eastern Standard Time**
Time: approximately 50 minutes and 10 minutes reading time
*Monolingual and/or bilingual printed dictionaries may be used.*

**Instructions to Students**

1. You will have 10 minutes to read all the papers and to familiarise yourself with the requirements of the questions.
2. Write all your answers to the questions in Section 1 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
3. You must answer ALL questions in Part A and Part B.
4. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
5. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
6. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© *Victorian Curriculum and Assessment Authority 2002*

SAMPLE

**Part A** (Questions 1–3)
(20 marks)

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information and convey the information accurately and appropriately.*

You will hear three texts. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in ENGLISH.

transcript

**Text 1**

1. What are the students required to do?

( marks)

transcript

**Text 2**

2. Two issues that face a number of elderly people in care are referred to in this conversation.

   What are they?

   •

   •

( marks)

transcript

**Text 3**

3. Using the information provided in the conversation, complete the table below:

| **Lalitha** | **Kannan** |
|---|---|
| Plans<br>• | Plans<br>•<br>• |
| Interests<br>•<br>• | Interests<br>•<br>• |

( marks)

You may make notes in this space

**Part B** (Questions 4–5)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of texts by identifying and analysing information;*
- *convey the information accurately and appropriately.*

---

You will hear two texts, one relating to Question 4 and one relating to Question 5. Each text will be played twice. There will be a short break between the first and second playings in which you may make notes.

Listen carefully to each text and then answer the questions in TAMIL.

transcript

**Text 4**

4. You are Radha. Write a short note for your brothers Babu and Vinodh, explaining Siva's message.

   நீர் ராதா. உமது சகோதரர்கள் பாபு, விநோத் ஆகியோருக்கு சிவா கூறியதை விளக்கி ஒரு குறிப்பு எழுதுக.

   ( marks)

You may make notes in this space

transcript

**Text 5**

5. Using information provided in the speech, complete the table below:

இப் பேச்சில் இருந்து பெறப்பட்ட விஷயங்களை தரப்பட்ட உபதலையங்கங்களுக்குக் கீழ் அட்டவணைப்படுத்துக.

| Reasons for lack of participation in politics by women | Problems facing estate workers |
|---|---|
| மலையகப் பெண் தொழிலாளர் அரசியலில் ஈடுபடாமைக்குக் காரணங்கள் | மலையகப் பெண் தொழிலாளர்களை எதிர் நோக்கியிருக்கும் பிரச்சினைகள் |
| •<br>•<br>• | •<br>•<br>•<br>•<br>•<br>• |

( marks)

You may make notes in this space

**End of Section 1**

# Transcript

## SECTION I: Listening and responding

### Part A

#### Text 1

ஆசிரியர்களே! மாணவர்களே! மழை அதிகமாகப் பெய்வதால் மதிய இடை வேளை நேரத்தில் மழை நாட்களுக்குரிய வழமையான வகுப்பறைகள் திறக்கப்படும். ஒவ்வொரு வகுப்பினரும் தமக்கென ஒதுக்கப்பட்ட வகுப்பறையில் மதிய உணவை அருந்தலாம். வகுப்பறைகளை அசுத்தப்படாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

#### Text 2

தாய்: நீ இன்று நேரத்திற்கு வீட்டுக்கு வர முடியுமா ?

மகன: என்ன விஷயம்?

தாய்: ஒன்றும் இல்லை, பாட்டிக்குச் சுடச்சுடச் கொஞ்சம் சாப்பாடு கொண்டு போகலாம் என்று யோசிக்கிறேன்.

மகன்: அதற்கென்ன, நாலு மணியளவில் வரப்பார்க்கிறேன். பாட்டிக்கு அவர்கள் கொடுக்கிற சாப்பாட்டைப் பார்த்தாலே பசிக்காதே.

தாய்: பாட்டியைப் பிழை சொல்ல முடியாது. பழக்கப்படாத சாப்பாடுதானே. அதுமட்டுமல்ல, நாங்கள் போனால்தானே தமிழில் பேசலாம். அல்லது அங்குள்ளவர்களோடு யேஸ், நோ சொல்லி தலை ஆட்டுகிறது தானே.

மகன்: சரி அம்மா. நீங்கள் ஆயத்தமாய் நில்லுங்கோ. நான் நாலு மணிக்குப்பிந்தாமல் வருவேன்.

#### Text 3

கண்ணன்: ஒருபடி பள்ளிப்படிப்புக்கு முற்றுப் புள்ளி வைத்தாச்சு. அடுத்தகட்டத்திற்கு நாலு மாதங்கள் இருக்கு.

லலிதா: எல்லாம் முடிஞ்சது பெரிய ஆறுதல்தான். கடந்ந பத்து பதினொருமாதம் போதும் என்று போச்சுது.

கண்ணன்: அது சரி. அடுத்த மூன்று மாதப் பொழுதை எப்படிப் போக்கப் போறீர்?

லலிதா: திரும்பவும் படிப்புத் தொடங்க முன் எனக்கு ஓய்வு வேணும். எனக்கு மாமா ஒருவர் சென்னையில் இருக்கிறார். அங்கே வரச்சொல்லி அழைத்திருக்கிறார். போறதுக்கு ஆயத்தம் செய்கிறன்.

கண்ணன்: எவ்வளவு காலத்திற்குப் போறீர்?

லலிதா: ஏழு கிழமைகள் வரையில். சென்னையில் தான் கூடியகாலம் நிற்பன். அங்கே சொந்தக்காரர் சிலர் இருக்கினம். இசைக்கச்சேரிகள் நடக்கிற காலம் தானே. சில கச்சேரிகளுக்குப் போக விருப்பம். ஆசைதீர தமிழ்த் திரைப்படங்களும் பாக்கவேணும். பிறகு பங்களூர், கோடைக்கானல் போன்ற இடங்களுக்குப் போகலாம் என்று யோசிக்கிறன்.

கண்ணன்: நீர் அதிஷ்டசாலி தான். எனக்கும் எங்களுடைய சங்கீதத்தில் நல்ல விருப்பம். இங்கு நடக்கிற நல்ல இசைநிகழ்ச்சிகள் ஒன்றையும் தவறவிடமாட்டன். கிறிக்கட்டும் விளையாடப்போவன். எனக்கு இப்ப ஒரு வேலை கிடைச்சிருக்கு. பணம் சேர்த்து ஒரு கார் வாங்கவேணும். நாங்கள் இருக்கிற இடத்தில் போக்குவரத்து வசதிகள் அதிகம் இல்லை. யூனிப்படிப்பு தொடங்க தெருவிலேயே நேரம் போய்விடும்.

லலிதா: அதுவும் சரிதான் . நான் இந்தியாவில் இருந்து திரும்பி வந்ததும் உம்முடன் தொடர்பு கொள்ளுகிறேனே.

கண்ணன்: சரி, உம்முடைய சுற்றுலாவை நன்றாக அனுபவித்து விட்டு வாரும்.

## Part B

### Text 4

சிவா: ராதாவா? பாபு அல்லது விநோத் நிக்கிறாங்களா?

ராதா: அவங்கள் இன்னும் வரவில்லை, அண்ணா.

சிவா: நாங்கள் மூன்று பேரும் இன்று இரவு சினிமாவுக்குப் போவதாக இருந்தோம். திடீரென என்னை இரவு வேலைக்கு அழைத்திருக்கினம். உனக்கு எத்தனை மணிக்கு டான்ஸ்க்ளாஸ்?

ராதா: நான் நாலு மணிக்குக் கிளம்பிவிடுவேன்.

சிவா: அப்ப ஒன்று செய்கிறாயா? இன்று படம் பாக்கிற திட்டம் எனக்குச் சரிவராது. அவங்க இரண்டு பேரும் போக விரும்பினால் போகட்டும். இல்லாவிட்டால் இன்னொரு நாள் போகலாம் என்று எழுதி வைத்துவிட்டுப் போகிறாயா?.

ராத: சரி, எழுதி வைக்கிறேன், அண்ணா.

சிவா: அப்ப சரி, வைக்கிறேன்.

### Text 5

தலைவர் அவர்களே! சகோதரிகளே!

இங்கு பெரும் திரளாக நிங்கள் வருகை தந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமே. எமது மலையகப் பெண்கள் அரசியலில் ஈடுபடவேண்டும் என்பதை வற்புறுத்துவதே எனது பேச்சின் முக்கிய நோக்கமாகும். அரசியல் என்றவுடனேயே எமது பெண்கள் நினைக்கிறார்கள் இதற்கும் எமது வாழ்க்கைக்கும் தொடர்பு இல்லை, எமது பங்கு வேட்டுப்போடுவது மட்டுமே என்று. இது தவறு.

அரசியல் தலைமைப்பீடங்களில் உள்ள ஆணாதிக்கம் நிறைந்த தலைமைவாதிகள், ஒடுக்கப்பட்டும், அதிகாரம் குறைந்தும் பின்தங்கிய நிலையில் உள்ள எமது தோட்டப் பெண்களை மேலும் கட்டுப்படுத்தவே உபாயங்களைத் தேடிவருகின்றனர்.

இது தவிர, குடும்பத்திலும் சமூகத்திலும் நிலவும் கட்டுப்பாடுகளும் எமது பெண்கள் அரசியலில் பங்கெடுக்க தடையாக இருக்கின்றன. குடும்பத்தில் ஆண்கள் விரும்புகிற அரசியல் கருத்தையே பெண்களும் ஏற்கவேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். ஆண், பெண் செய்கின்ற வேலைகள், கொடுக்கப்படும் சம்பளம் முதலியன வேறானவையாகவே காணப்படுகின்றன. எமது சமூகமும் குடும்பமும் பெண்களை அரசியலுக்குச் செல்ல விடாது தடை விதிப்பதுதான் இதற்கு முக்கிய காரணம்.

தோட்டப் பெண்கள் மிகவும் அடிமட்டத்தில் இருந்து பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். கணவன், மனைவியை அடித்துத் துன்புறுத்துவதும், பெண் என்ற காரணம் காட்டி கல்வியை இடை நிறுத்துவதும் நியாயமானதல்ல. இவ்வாறான நிலைமைகளை சீர்திருத்துவதற்கு சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். முதலில் எமது தோட்டப்பெண்கள் அரசியலுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கவேண்டும். தாம் அரசியலில் ஈடுபடவேண்டிய தேவையைப் புரிந்து கொள்ள வேண்டும். தம்மை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினைகளான வீடமைப்பு, குடிநீர்வசதிகள், தொழில்பாதுகாப்பு விதிகள், அடிப்படை சுகாதார வசதிகள் போன்றவை அரசியலுடன் எவ்வாறு தொடர்புபடுகின்றன என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். தமது அன்றாட குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவும் அரசியலைப் பயன்படுத்தத் தவறி விடக்கூடாது, பின் நிற்கவும் கூடாது. மலையகத் தோட்டப் பெண்கள், தங்கள் உரிமைகளை வென்றெடுக்க பெண்கள் இயக்கம் ஒன்றைக் கட்டிஎழுப்ப வேண்டும்.

*நன்றி,* வீரகேசரி–30.05.99

COLLABORATIVE CURRICULUM AND ASSESSMENT FRAMEWORK FOR LANGUAGES
AUSTRALIA

Student/Registration Number | | | | | | | | | |

Centre Number | | | | | |

SAMPLE

**2002** PUBLIC EXAMINATION

# Tamil

## Continuers Level

### Section 2: Reading and Responding (30 marks)

**Tuesday 29 October**
Time: approximately 1 hour 15 minutes
*Monolingual and/or bilingual printed dictionaries may be used.*

**Instructions to Students**

1. Write all your answers to the questions in Section 2 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
2. You must answer ALL questions in Part A and Part B.
3. Answer Part A in ENGLISH and Part B in TAMIL.
4. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
5. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

*© Victorian Curriculum and Assessment Authority 2002*

**Part A** (Questions 6–7)
(20 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and/or specific aspects of texts, by, for example, comparing, contrasting, summarising, or evaluating, and convey the information accurately and appropriately.*

---

6. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**Text 6**

சைப்பிரஸில் கல்வி பயிலுங்கள

விஷேட கட்டணம்

பாடநெறி கட்டணம் வருடத்திற்கு 1700 டொலர்

- டிக்ரி, டிப்ளோமா மற்றும் சேர்டிபிகேட் பாடநெறி.
- எஞ்ஜினியரிங், கட்டிடதொழில்நுட்பம், படம்வரைதல், பத்திரிகைத்துறை, பெஷன் டிசைன், பிஸ்னஸ் அட்மினிஸ்ரேஷன், கொம்பியூட்டர், ஹோாட்டல்மனேஜ்மென்ட்,, ட்ரவல், டுவரிஷம்.
- செய்முறைப் பயிற்சிவேளையில் சம்பளம், தங்குமிடம், உணவு என்பன ஐரோப்பிய தரத்திற்கேற்ப வழங்கப்படும்.
- UK, USA, Canada, Australia அல்லது ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டிற்குள் நுழைவதற்கு அரிய சந்தர்ப்பம்.
- அனைத்துபாடநெறிகளிற்கும் போதனை மொழி ஆங்கிலம்.
- சைப்பிரஸ் கல்லூரிக்கு 1990 ம் ஆண்டு தொடக்கம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் நாங்களே

CAREEM AND COMPANY
549/1, Galle Road Mount Lavinia (Opp Peoples Bank)
Tel: 714267, 737087 Fax: 737087
Email: Careem&visual Ik
Web:http/www.webasia.com/Careem
(A Subsidiary of Careem Gems Ltd, NICOSIA, CYPRUS)

நன்றிஇ வீரகேசரி– 15/08/99

a. What are two positive features of the courses offered?

---

---

b. Apart from the cost of the courses, what feature might prevent some students from applying?

---

---

---

( marks)

7. Read the text and then answer in ENGLISH the questions that follow.

**Text 7**

கரணம் தப்பினால் மரணம் வேண்டாம்

கேரள சர்க்கஸ்கலைஞர்கள் தொழிலைக் கைவிடுகிறார்கள்

சௌமி முகுந்தன் இமை மூடிக்கொண்டாலே போதும். 30வருடங்களுக்கு முன்பு கல்கத்தாவின் அந்த இரவு ஞாபகத்திற்குவருகிறது. சிவப்பு ஜீப்பில் கம்பீரமாகப் அவர் உள்ளே நுழைய, சாகஸத்தைப் பார்க்க வந்த கூட்டம், சர்கஸ்கூடாரம் முழுவதும் நிரம்பி வழிய, அக்சிலறேட்டரை ஒரு மிதி மிதிக்கிறார். ஜீப் பறக்கிறது. இந்தப்பக்கம் அமைக்கப்பட்டிருக்கிற உயர்ந்த மேடையில் ஏறி அந்தரத்தில் பறந்து அந்தப்பக்கம் தரை இறங்குகிறது. புல்லரித்துப்போன கூட்டம் ஒரு நிமிடம் வாயடைத்துப்போய் பிறகு எழுந்து நின்று, ஜீப்பில் பறக்கும் சாதனை செய்த அந்த முதல் பெண்மணியைக் கைதட்டிப் பாராட்டுகிறது.இப்பொழுது தலைச்சேரி அருகே தர்மடத்தில் ஒரு சிறு குடிசையில் சௌமி வசிக்கிறார். சர்க்கஸ்ஸை விட்டு இருபது வருடங்களாகி விட்டது.

கேரள மாநிலத்தில் கண்ணூர்மாவட்டத்தில் இருக்கும் தலைச்சேரி ஒரு சர்க்கஸ் நகரம். “கைக்கெட்டும் தூரத்தில் வளை குடாநாடுகளில் வேலை வாய்புக்கிடைக்கும் போது, வாழ்வா சாவா போராட்டத்தில் கயிற்றின் மீது நடக்க இங்கே யாரும் தயாராகவில்லை,” என்கிறார் பல சர்க்கஸ் கம்பனிகளின் உரிமையாளராக இருந்த பி. வி. ராகவன். சொளமியின் மகன் கூட ஒரு வளைகுடாநாட்டில் மெக்கானிக்காக வேலை செய்கிறார்.

“கீழே விழுந்து காலை உடைத்துவிட்டால் அவ்வளவு தான். உடனே வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். பல சர்கஸ் கம்பனிகளில் உதவித்தொகை கூடக்கிடைக்காது” என்கிறார் கமலா சர்கஸின் முன்னாள் டிரபீஸ் கலைவீரர் பாலகிருஷ்ணன். இன்றைக்கு இனிப்புக்கடை வைத்திருக்கும் பாலகிருஷ்ணன் உஜ்ஜயினில் பறந்தாடிய பொழுது கீழே விழுந்து மோசமாகக் காயமடைந்ததால் வீட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டார்.

நாட்டின் முதல் சர்கஸ் அகதாமியை புகழ்பெற்ற சர்கஸ் பயிற்சியாளரான குன்னிக் கண்ணன் தலைச்சேரியில் ஆரம்பித்ததைப்பற்றி அந்த ஊர்க்காரர்களுக்கு பெரிய சந்தோஷம் ஒன்றும் இல்லை. அதே போல யானையைத் தன்மீது நடக்கச் செய்த முதல் இந்தியர் என்ற பாராட்டைப் பெற்ற கீழாந்தி சாண்டோ கிருஷ்ணணின் புகழும், இன்றைக்கு தலைச்சேரி மக்களுக்கு புல்லரிக்கிற விடயமேயில்லை. அவர்கள் கண்முன் பல சோகங்கள். ரப்பராய் உடலை வளைத்து நெளித்து வித்தை காட்டிய ராதாக்கு தீராத முதுகுவலி. தரையில் இருந்து வேலை செய்ய முடியாது. இப்படிப் பல சோகங்கள. 1987 இல் இந்தக் கலைஞர்களுக்கு மாதம் 150 ரூபா இளைப்பாற்று ஊதியம், கொடுப்பதாக அரசு தீர்மானித்தது. 1990 இல் சர்கஸ் கலைஞர்களின் குழந்தைகளுக்கென்றே 30 இலட்சம் ரூபாய் செலவில் ஜிம்னாஸ்டிக் நிலையத்தை தலைச்சேரியில் அமைத்தது. ஆனால் முயற்சி எதிர்பார்த்தளவு வெற்றி பெறவில்லை.

சர்கஸ் கலையைத்தழுவி எழுதப்படும் கதைப்புத்தகங்களும் எடுக்கப்படும் சினிமாப் படங்களும் மட்டுமே தலைச்சேரியில் இன்று அழிந்து வரும் இந்தக்கலையின் நினைவுச்சின்னங்களாகி விடலாம்.

(நன்றி – இந்தியா ருடே, அக்டோபர் 1996)

a. What action was taken by the government and why?

b. What action should the government have taken to address the issue more effectively? Support your answer with evidence from the text.

( marks)

**Part B** (Question 8)
(10 marks)

---

*When judging performance in this part, the examiner(s) will take into account the extent to which the student demonstrates the capacity to:*

- *understand general and specific aspects of a text by identifying, analysing, and responding to information;*
- *convey information coherently (structure, sequence, accuracy and variety of vocabulary and sentence structure) and appropriately (relevance, use of conventions of the text type).*

---

8. Read the text and then answer in TAMIL the question below.

**Text 8**

ஆதரவற்ற முதியோரை அரவணைக்கும் கருணை இல்லம்

தன் இரத்தத்தையே பாலாக மாற்றி அன்பையும் பாசத்தையும் கொட்டி ஊட்டி வளர்க்கப்பட்ட பிள்ளைகள் பிற்காலத்தில் தம் பெற்றோரை சுமையாக நினைத்து ஒதுக்கிவிடும்போது, பெற்றோர் தம் சுமைகளை இறக்கி வைக்க நாடும் இடம் கருணை இல்லம் ஒன்று தான். அநாதரவாக்கப்படும் முதியவர்களுக்கு அபயம் அளிப்பது தான் மாதம்பிட்டியிலுள்ள கருணை இல்லம் ஆகும். இங்கு ஆண்களும் பெண்களுமாக அறுபது முதியவர்கள் தஞ்சம் அடைந்துள்ளனர். கருணை இல்லத்தில் ஏற்பட்ட இட நெருக்கடியால் 7500 ரூபாய் கொடுத்து ஒரு வாடை வீட்டில் பெண்பிரிவு இயங்குகிறது. இவர்களில் பெரும்பாலானோர் தமது குடும்பங்களினால் கைவிடப்பட்டவர்கள். வேறு சிலர் நோய்வாய்ப்பட்டிருக்கையில் உறவினர்களால் ஆஸ்பத்திரிகளில் கைவிடப்பட்டவர்கள். புறக்கணிக்கப்படும் எவரும் இன மத மொழி வேறுபாடின்றி இக் கருணை இல்லத்தில் சேர்க்கப்படுகின்றனர். ஆனால் இட நெருக்கடி காரணமாக புதியவர்களைச் சேர்க்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக கருணைஇல்லத்தின் தலைவி அருட்சகோதரி பற்றிமா நாயகி தெரிவிக்கிறார்.

இக் கருணை இல்லத்தில் சேருவதற்குப் பலர் முயல்கின்ற போதிலும் அவர்களை அனுமதிக்க முடியாத நிலையில் இந்த இல்லம் இருந்து வருகிறது. இரண்டு கோடிக்கும் சற்று கூடுதலான தொகையில் நான்கு மாடிக் கட்டிடமாக நிருமாணிக்கப்பட இருந்த புதிய கட்டிடம் நிதிப்பற்றாக்குறையினால் நிறுத்தப்படடுள்ளது. இக்கட்டிட நிர்மாணத்தை பூர்த்தி செய்வதற்கு ஒரு கோடியே 72 இலட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கருணை இல்லத்தைப் பராமரிக்கும் அருட்சகோதரிகள் முழுக்க முழுக்க பொது மக்கள், வர்த்தக நிலையங்கள் உவந்தளிக்கும் அன்பளிப்பிலேயே தங்கி இருக்கின்றனர். அவர்களது கட்டிட நிருமாணப் பூர்த்திக்காகவும், அநாதை முதியவர்களின் பராமரிப்புக்காகவும் கருணை உள்ளம் உள்ளவர்கள் முன் வரவேண்டும் என்று கேட்கிறோம்.

நன்றிஇ வீரகேசரி–20.07.97

You may make notes in this space

The youth branch of the Australian Eelam Tamil Association wishes to extend its support to this worthy cause. As President of the Association, write a letter in 150–200 words responding to the Carmel Sisters' appeal explaining why you will support them, and what you intend to do to assist.

அவுஸ்திரேலிய ஈழத்தமிழ்சங்கத்தின் இளைஞர் கிளை, இந்த யோக்கியமான முயற்சிக்கு கைகொடுத்து உதவ விரும்புகிறது. நீர் சங்கத்தின் தலைவராக இருக்கிறீர். எக்காரணங்களுக்காக, எவ்வகையில் அவர்களுக்கு உதவ முன்வந்திருக்கிறீர்கள் என்பதை விளக்கி காமேல் சகோதரிகளுக்கு பதில் எழுதுக.

*Do not remove this page from the question booklet.*

Student/Registration Number

Centre Number

Tamil
Continuers Level

Question 8

( marks)

**End of Section 2**

COLLABORATIVE CURRICULUM AND ASSESSMENT FRAMEWORK FOR LANGUAGES
AUSTRALIA

Student/Registration Number | | | | | | | | | Centre Number | | | | |

SAMPLE

**2002 PUBLIC EXAMINATION**

# Tamil

## Continuers Level

### Section 3: Writing in Tamil (15 marks)

**Tuesday 29 October**
Time: approximately 45 minutes
*Monolingual and/or bilingual printed dictionaries may be used.*

**Instructions to Students**

1. Write your answer to a question from Section 3 in this booklet in blue or black ink or ball-point pen. Space is provided for you to make notes.
2. You must answer ONE question in TAMIL.
3. Write your student/registration number and the centre number (if required) on the front cover of this booklet.
4. All question booklets will be collected at the end of the examination.

*This examination is used for the HSC (New South Wales), the NTCE (Northern Territory), the SACE (South Australia), the TCE (Tasmania), the VCE (Victoria), and the WACE (Western Australia).*

© Victorian Curriculum and Assessment Authority 2002

**Section 3** (Questions 9–11)
(15 marks)

---

*When judging performance in this section, the examiner(s) will take into account the extent to which the student demonstrates:*

- *relevance and depth of treatment of ideas, information, or opinions;*
- *accuracy and range of vocabulary and sentence structures;*
- *the capacity to structure and sequence response and use conventions of the text type.*

---

Answer ONE question from this section in 200–250 words in TAMIL.

9. You have been asked to give a speech to your class about an aspect of the changing role of women in the world today. Write the script of your speech.

   இன்றைய உலகில் பல வகைகளில் பெண்களின் பங்கு மாற்றமடைந்து வருகின்றது. இம் மாற்றங்களில் ஒன்றைப்பற்றி உமது வகுப்பு மாணவர்களுக்கு ஒரு பேச்சு வழங்கும் படி நீர் கேட்கப்பட்டுள்ளீர். அதற்கான பேச்சுப்பிரதியை எழுதுக.

10. Write a review for publication in a young people's magazine of a book, magazine or film you have read or seen that you feel is particularly relevant to young people today.

    நீர் வாசித்த ஒரு புத்தகம் அல்லது செய்தித்தாள் அல்லது சஞ்சிகை இன்றைய இளைஞர்களுக்கு உகந்தது என்று கருதுகிறீர். அதனைப்பற்றிய விமர்சனத்தை இளைஞர் சஞ்சிகை ஒன்றில் பிரசுரிப்பதற்கு எழுதுக.

11. As secretary of the local youth sports association, you have been asked to make an effort to enrol more members. Write a report of the association's activities and its future plans, for publication in a newsletter.

    நீர் உள்ளூர் இளைஞர் விளையாட்டுக் கழகம் ஒன்றின் செயலாளர் என்ற முறையில் அக்கழகத்தில் கூடுதலான அங்கத்தவர்களைச் சேர்ப்பதற்கான முயற்சி எடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளீர். இதற்கமைய, கழகம் ஆற்றிவரும் பணிகள் , அதன் எதிர்காலத் திட்டங்கள் என்பன பற்றிய அறிக்கை ஒன்றை செய்தித்தாள் ஒன்றில் பிரசுரிப்பதற்காக எழுதுக.

You may make notes in this space.

Question Number:

**End of Section 3**